1981 மே 13]

போன்ற பணிகளுக்காக நிறுத்தி வைக்கிறார்கள். இந்தியாவில் ஏற்றுமதியாகும் தோல் பொருள்களில் 3/4 சதவீதம் தமிழகத்தில் இருந்துதான் ஏற்றுமதியாவதால், அப்படிப் பிடிக்கப்படும் 1சதவீத தொகையில் 3/4 பாகம் தமிழகத்திற்குத்தான் செலவிட வேண்டும் என்று வற்புறுத்த தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதற்குத் தமிழக அரசு எல்லா வகைகளிலும் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புல்லி பினிஷ்ட் தோல்கள்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும்; மற்றவைகளைச் செய்யக் கூடாது என்று மத்திய அரசு ஏதாவது தடைவிதித்திருக்கிறதா? அந்த மாதிரி தடை இருப்பது உண்மையானால், அதன் காரணமாகத் தமிழகத்தில் உள்ள சிறு சிறு தோல் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பதும் உண்மையா? அதை மாற்ற தமிழக அரசு, சிறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பாதுகாக்கக் கூடிய முறையில் செமி பினிஷ்ட் தோல்களையும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பினிஷ்ட் லெதர்தான் அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு தடை விதித்துத்தான் இருக்கிறது. ஏற்கனவே போன கேள்விக்குப் பதில் சொன்னேன். அதை மாற்றி முழு அளவிலான ஏற்றுமதிக்கு மத்திய அரசு இணங்கவேண்டும் என்று மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது, தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசு உதவி பெறும் தனியார் பஞ்சாலைகளில் வேலைக்கு ஆள் எடுத்தல்

*வினா எண். 1062- திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரசு உதவி பெற்று இயங்கும் தனியார் பஞ்சாலை மற்றும் நூல்மில்களில் வேலைக்கு ஆள் எடுக்கும் முறை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் பஞ்சாலைகளில் வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமே ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை.

திரு. என். பழனிவேல் : தனியார்துறையில் இயங்கக்கூடிய பஞ்சாலைகள் மற்றும் ரைஸ்மில்களில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம்தான் வேலைக்கு ஆள்களை எடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அரசாங்க உதவி பெற்று இயங்கக்கூடிய இம்மாதிரி நிறுவனங்களில் அவரவர்கள் இஷ்டப்படி தங்களுக்கு வேண்டியவர்களை, அவர்கள் சமூகத்தாரைப் பார்த்து வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இதைப் போக்குவதற்கு அரசாங்கம் இனியாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தேசிய பஞ்சாலைக் கழகத்திடமிருந்தும் அதேபோல் மத்திய நிதி அளிக்கிற நிறுவனங்களிடம் இருந்தும் பஞ்சாலைகள் தொடங்குகிறபோது நிதி பெற்றுக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனியாக தொழில் துவங்கும்போது இதுபோல் நெருக்கமான கட்டுப்பாடுகள் வைத்தால் வேலைக்கு ஆட்களை எடுப்பதில் கால தாமதம் போன்ற பல நிகழ்ச்சிகளால் தொழில் வளர்ச்சி பாதிக்கபடும் என்ற அடிப்படையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக இப்படியே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் பொதுத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள், பப்ளிக் செக்டார், ஜாயின்ட் செக்டார் அல்லது அரசு நடத்துகிற நிறுவனங்கள், டிட்கோ போன்று தனியாரோடு சேர்ந்து நடத்துகிற மற்றத் தொழில்களில் இந்த வரைமுறையைக் கடைப்பிடித்து அதன் மூலம் வேலைக்கு ஆட்களை எடுக்கிற அந்த முறை நடைமுறையில் இருக்கிறது.

திரு. கே. வைத்தும்பி : மாநில அரசிடம் மானியம் பெறுகிறார்கள். மாநில அரசிடம் பெருந்தொகையை கடனாகப் பெறுகிறார்கள். ஆனால் பணியில் சேர்க்கும்போது தன் ஜாதிக்காரர்களைமட்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த நிலை தமிழ்நாட்டில் பல நூற்பாலைகளில் இருக்கின்றன, இந்த நிலையை மாற்றி இனி ரிட்டயராகும்போது அவர்களுக்குப் பதிலாகப் புதிதாக வேலைவாய்ப்பு அளிக்கும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1 சதவீதமாவது வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் இப்போதுள்ள நிலையை மாற்றியமைக்க அரசு முன்வருமா? அப்படி முன்வராத ஆலைகளை அரசாங்கமே மேற்கொண்டு நடத்துவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பொதுவாக பஞ்சாலைகளாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி தொழிலை ஆரம்பிக்கும்போது அது எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படுகிறதோ அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைக் கடைபிடிக்கவேண்டுமென்று தொழில் துவங்குபவர்களை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. என். பழனிவேல் : அரசு உதவி பெற்று இயங்கும் நிறுவனங்களை நாம் இப்படித்தான் ஆள்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் தொழில்கள் ஆரம்பிக்க முன்வரமாட்டார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அரசாங்கம் பயந்துகொண்டு இதைச் செய்யாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. இம்மாதிரி தனி நபர்களுக்கு அரசு பயந்துகொண்டு இருந்தால் இலட்சக்கணக்கான தாழ்த்தப்

பட்ட மக்களுக்கு வேலை கிடைக்க சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடும். ஆகவே அவர்களுக்கு வேலைக்குச் சந்தர்ப்பம் ஏற் படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார் தொழில்கள் துவங்கும்போது இதுபோல நெருக்கமான கட்டுப்பாடுகள் வைத்தால் காலதாமதம் ஏற்படும் என்றுதான் நான் சொன்னேன். அது இப்போது அல்ல, இந்த அரசாங்கம் மட்டுல்ல, இதற்குமுன் இருந்த அரசாங்கமும் அதற்குமுன் இருந்த அரசாங்கமும் இந்த முறையைத்தான் பின்பற்றி வந்திருக்கின்றன. அதைத்தான் இந்த அரசும் பின்பற்றுகிறது.

சென்னை நகரில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகள்.

* வினா எண் 1079 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

1979-1980-ஆம் ஆண்டில் நகரில் நடைபெற்ற கொலை, களவு நிகழ்ச்சிகளில் துப்பு துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

1.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கொலைகள்	39
	அவற்றுள் துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள்	1
2.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த கூட்டுக்கொள்ளைகள்.	7
	இந்த 7 வழக்குகளும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.	
3.	1979-80 ஆம் ஆண்டில் சென்னை நகரில் பதிவுசெய்யப்பட்ட கொள்ளை வழக்குகள்	64
	துப்புத் துலக்கப்படாமல் இருக்கும் வழக்குகள்.	4

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே நடைபெற்ற கொலை, கொள்ளை ஆகிய வைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். துப்பு துலக்காமல் இருக்கின்ற கணக்கைப பற்றிச் சொன்னார்கள். எந்தெந்த வழக்குகளில் துப்பு துலக்காமல் இருக்கின்றது. என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தபடி கொலை வழக்குகள் 39. அதிலே 38 கொலைகள் பற்றி துப்பு துலக்கப்பட்டு, ஒரே ஒரு வழக்கிலே மட்டும் துப்பு துலக்கப்படவில்லை.